**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.91/2023**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சரவணபாண்டியன்)**
**01.07.2025**

**4ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 பட்டா பாஸ் புத்தகங்களில் தாவா சொத்து அல்லாமல் வேறு பல சொத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.3 பெறுவதற்கு எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள சர்வே எண் 108/9 சொத்திற்கு தற்போதைய பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களுக்கு நகல் பெறுவதற்காக எந்த தேதியில் மனு கொடுத்தேன் என ஞாபகம் உள்ளதா என்றால் 07.02.2023 ஆம் தேதி தான் கொடுத்தேன். நகல் பெறுவதற்கு மனு கொடுக்க வேண்டும் என்றால் பத்திரத்தின் எண் தெரிந்தால் தான் மனு கொடுக்க முடியும் என்றால் சரிதான்.

4. அந்த பத்திர எண்கள் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் வில்லங்க சான்றிதழ் மூலம் தெரிந்துகொண்டேன். வில்லங்க சான்றிதழ் பெறுவதற்கு எப்போது மனு கொடுத்தேன் என்றால் 04.02.2023 ஆம் தேதி மனு கொடுத்தேன்.

5. 04.02.2023 ஆம் தேதி வில்லங்கம் பார்த்த பிறகு அதில் கண்ட நபர்களை சந்தித்து கேட்டேனா என்றால் இல்லை, வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு தான் அனுப்பினேன்.

6. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் எனது கிராமத்தில் இருந்து 1 கி.மீ தூரத்தில் உள்ள மெய்வழிச்சாலையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

7. 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் பத்திரங்களை ரத்து செய்து கொள்ளுமாறு நானோ, எனது தாயாரோ கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லை விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, ஓரளவிற்கு தெரியும். மேற்படி நான்கெல்லை விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. தாவா சொத்தில் எவ்வித சாகுபடியும் இல்லாமல் வெற்று நிலமாக தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எவ்வித சாகுபடியும் இல்லை என்றால் இல்லை, கடலை சாகுபடி செய்திருந்தேன். முழு சொத்திலும் கடலை சாகுபடி செய்திருந்தேன். அவ்வாறு சாகுபடி செய்த கடலையை அன்னவாசலை சேர்ந்த சின்னையா என்ற நெல் வியாபாரியிடம் விற்பனை செய்தேன்.

9. எனது இதர நிலங்களில் கடலை சாகுபடி செய்திருந்தேனா என்றால் சாகுபடி செய்திருந்தேன். தாவா சொத்தில் எந்த வருடம் கடைசியாக சாகுபடி செய்தேன் என்றால் 2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சாகுபடி செய்தேன்.

10. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான பத்திரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த ஆவணங்களில் நிலம் கிரையம் வாங்கிய நபர்களின் கைப்பேசி எண் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் கைப்பேசி உள்ளது என்றால் சரிதான்.

11. மேற்படி நபர்களிடம் கிரையம் குறித்து போன் மூலமாக கேட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் வேலி அமைக்க சென்றபோதே என்னை தடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

12. தாவா சொத்தை சுற்றி கல்லு கால்கள் ஊன்றி வேலி போடப்பட்டுள்ளது என்றால் கல் கால்கள் மட்டும் ஊன்றப்பட்டுள்ளது.

13. தாவா சொத்தில் நான் கடலை சாகுபடி செய்தது மற்றும் பல வருடங்களாக அனுபவம் செய்த விவரம் அருகில் உள்ள நில உரிமையாளர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான்.

14. 4ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற போதே கூத்தினிப்பட்டி சிவா என்பவரை அழைத்து கம்பி வேலி போட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

15. 5ஆம் பிரதிவாதி பாலசந்தர் என்ன நிறத்தில் உள்ளார், அவரது அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா இடத்திற்கு யார் சென்றபோது பிரச்சனை செய்தார்கள் என்றால் நான் சென்றபோது தான் பிரச்சனை செய்தார்கள்.

16. வழக்கில் என்னிடம் 5ஆம் பிரதிவாதி தான் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளது போல் அந்த தேதியில் 5ஆம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ பிரச்சனை செய்யவில்லை என்றும், வழக்கில் குறிப்பிட்டுள்ள தேதியில் 5ஆம் பிரதிவாதி இந்தியாவிலேயே இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவ தேதியில் எனது தாயார் வழக்கு சொத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

17. தாவா சொத்தில் பட்டாவின் அடிப்படையில் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டா எண் 1558 என்றால் சரிதான். மேற்படி பட்டா 2007ஆம் ஆண்டே நீக்கம் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

18. தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவணங்களான மூல ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். பட்டாவை மட்டும் வைத்து தாவா சொத்தில் உரிமை கோருவதால் வருவாய் துறையினரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

19. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தவறுதலாக வருவாய் துறையில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் முறையாக விசாரணை செய்யப்பட்டு எங்களது பட்டா 2007ஆம் ஆண்டே நீக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்தில் வேலி போட சென்றபோது தான் தெரிய வந்தது என வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20. வழக்கிற்கான வழக்கு மூலம் பொய்யாகவும், கற்பனையாகவும் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எவ்வித தகுதியும் இல்லை என்றும், சாட்சியம் அளிப்பதற்காக தனி அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல.

21. 4ஆம் பிரதிவாதி உரிய பிரதிபலனுக்கு தாவா சொத்தை 3ஆம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் 4ஆம் பிரதிவாதியை பொறுத்து எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

22. பழைய வருவாய் ஆவணங்களை பயன்படுத்தி பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டியது என்றும், எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/−திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.